இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 01 | திகதி : 15.01.2023 | விலை : 50.00

## தீர்வுக்காக அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் வேற்றுமை மறந்து செயற்படவேண்டும்!

### பொங்கல் வாழ்த்துச் செய்தியில் யாழ். ஆயர் அழைப்பு



"பேச்சுக்கள் வழி இலங்கை நாட்டில் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தத் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமது கட்சி முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் மறந்து செயற்பட வேண்டுமெனத் தமிழ் மக்கள் பெயரால் அன்புடன் வேண்டுகிறோம்." இவ்வாறு யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது பொங்கல் தின வாழ்த்துச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:- பொங்கல் விழா ஒரு நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் ஒரு விழா. தமிழ் மக்கள் கொண்டாடும் இந்த நன்றியின் பெருவிழாவை உலககெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் 2023ஆம் ஆண்டில் கொண்டாடும் வேளை இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

இலங்கை நாடு 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று இவ்வாண்டு 75 ஆண்டுகள் நிறைவாகின்றன. பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளில் முழு வளர்ச்சி அடையாத நாடாக இலங்கை நாடு இருக்கிறது எனக்கணிப்பிடப்பட்டுள்ளது. ☞ 02

## திருஅவையில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும்

### கூட்டொருங்கியக்கத் திரு அவையின் ஆசியக்கண்ட மட்ட செயற்பாடுகளுக்கு இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றம் முன்மொழிவு.




கூட்டொருங்கியக்கத் திரு அவையின் உலக ஆயர் மன்றத்துக்கான தயாரிப்புப் பணிகள் தற்பொழுது கண்ட மட்டத்துக்கு முன்னேறியுள்ளன.

இதன்படி ஆசியக் கண்டத்தயாரிப்புப் பணிகளுக்கான முன்னுரிமைச் செயல்பாடுகளை இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் சுட்டிக் காட்டி உள்ளது.

ஆயர் மன்றம் தனது அறிக்கையில் திரு அவையில் திரு நிலையினர் பொதுநிலையினர் ஆகியோரின் ஆன்மீக உருவாக்கம் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும், பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும், திருநிலையினர் பொதுநிலையினருக்கு இடையிலான இடைவெளி களையப்பட வேண்டும், இளையோரின் உருவாக்கமும் திரு அவையில் அவர்களின் பங்களிப்பும் கவனிக்கப்பட வேண்டும் ☞ 02

### பொங்கிடும் பொங்கலே!

பொங்கலே வந்ததும்இன்றே
பூரிப்(பு) எழுவதும் இன்றே
பொங்கியே வழியும் கருணை
பிறக்குமே அன்பின் பெருமை
எங்குமே மனிதம் மலரும்
என்றுமே அமைதி நிலவும்
சங்கே முழங்கும் ஒலியில்
சமத்துவப் பொங்கலே வருகவே!


வயலும் வாய்க்க விளையும்
வாய்க்கால் நீரும் பாயும்
வியக்கக் கதிர்கள் உயரும்
வளைந்தே முதிர்வில் சாயும்
பயக்கும் பண்பால் பணியும்
பாடமாய் நமக்கே ஊட்டும்
இயற்கைப் பயனே காக்கும்
இயல்பின் பொங்கலே வருகவே!

கதிர்போல் களைகள் வளரும்
களையோ திருந்தால் பரவும்
முதிர்ந்த பகைமை உணர்வும்
முனைந்தே மனதைக் கொல்லும்
புதராய்க் கயமை சூழும்
பிறவிப் பயனும் வீழும்
புதராய் வாழ்வும் மாற்றமே
படைக்கும் பொங்கலே வருகவே!

உழவின் உயர்வை உணர்த்தும்
உன்னத நாளாம் இன்றே
மழலை சிறியோர் முதியோர்
மகிழும் நாளாம் இன்றே
கழனிகள் நிறைந்தால் களமே
கலகலப் பாகிடும் இன்றே
பழமைப் பண்பாட் டுயர்வே
பதிக்கும் பொங்கலே வருகவே




## அருட்பணி எட்வின் சவுந்தரா அடிகள் காலமானார்



யாழ். மறைமாவட்ட குருவும் பிரமந்தனாறு புன்னைநீராவி பிரதேசத்திலுள்ள ஆங்கில வளாகத்தின் இயக்குநரும் நிறுவுனருமாகிய அருட்திரு எட்வின் சவுந்தரா அடிகள் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் இறைவனடி சேர்ந்துள்ளார். இவர் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியில் நீண்ட பல ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995ற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டுக்குப் புலம் பெயர்ந்து அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் மறைமாவட்டத்தில் இணைந்து அங்கும் கற்பித்தல் பணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

புலம்பெயர் தேசத்திலிருந்து நாடு திரும்பி வன்னிப் பிரதேசத்திலுள்ள வறிய மாணவர்களின் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு தனது முயற்சியினால் பிரமந்தனாறு புன்னைநீராவிப் பிரதேசத்தில் ஆங்கிலக்கல்விக்கூடம் ஒன்றை நிறுவி ஆங்கிலக் கல்வியைக் கற்பித்து வந்தார். இங்கு பல மாணவர்கள் கல்வி பயின்று நல்ல நிலையில் உள்ளனர். இவரின் பணிவாழ்விற்காக இறைவனுக்கு நன்றிகூறி இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவோம்.

## அரசைக் கடிந்து கொண்டார் பேராயர்

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மைகளை மூடி மறைத்து குற்றவாளிகளைப் பாதுகாப்பதன் வழியாக அரசுத்தலைவர் ரணில் விக்ரமசிங்காவும் தலைகுனிவான செயலைச் செய்கிறார் என பேராயர் கர்தினால் மல்கம் இரஞ்சித் ஆண்டகை ஊடகச் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசு இலங்கையில் சட்டத்தின் ஆட்சியைச் சீர் குலைப்பதாகவும், ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ள சதி மறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## அ.ம.தி. களின் யாழ்.மாகாண முதல்வராக அருட்பணி. போல் ஜெயந்தன் பச்சேக் அமதி



அமலமரித்தியாகிகளின் யாழ். மாகாணத்தின் புதிய முதல்வராக அருட்பணி போல் ஜெயந்தன் பச்சேக் அமதி அடிகள் நியமனம் பெற்றுள்ளார்.

அமதிகளின் உயர் தலைவர், பேரருட்தந்தை இக்னேசியோ அலோன்சோ அமதி அடிகளாரினால், இந்நியமனம் கடந்தவாரம் வத்திக்கானிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அருட்பணி போல் ஜெயந்தன் பச்சேக் அமதி அடிகள், கடந்த காலங்களில், யாழ். சவேரியார் குருமடம், யாழ்.பல்கலைக்கழகம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் விரிவுரையாளராகவும், கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக நோர்வே நாட்டில் வாழும் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகக் குருவாகவும் பணியாற்றி வந்துள்ளார். புதிய முதல்வராகப் பணிப்பொறுப்பேற்கும் அருட்பணி போல் ஜெயந்தன் பச்சேக் அமதி அடிகளாரைப் பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## மறைந்த திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் இழப்பில் துயர் பகிர்வு



மறைந்த முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் இறுதிச் சடங்கு நடைபெற்ற தினத்தில் உலகெங்கும் வாழும் கத்தோலிக்க மக்கள் தங்களுடைய இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சிறப்பு வழிபாடுகளிலும் அஞ்சலி நிகழ்வுகளிலும் கலந்துகொண்டனர்.

யாழ். மறைமாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட துக்க அனுஷ்டிப்பு நிகழ்வில் ஆலயங்களிலும் துறவற இல்லங்களிலும் கத்தோலிக்க நிறுவனங்களிலும் திருத்தந்தையின் கொடியானது அரைக்கம்பத்தில் ஏற்றப்பட்டு, இறுதிச் சடங்குகள் வத்திக்கான் நேரம் காலை 9.30 மணிக்கு நடைபெற்ற போது இலங்கை நேரம் பிற்பகல் 2.00 மணிக்கு ஆலயங்களில் துக்கமணி ஒலிக்கவிடப்பட்டு உலகத் திரு அவையோடு திருத்தந்தையின் இறுதிச் சடங்கில் எல்லா இறைமக்களும் இணைந்து செபித்தனர். யாழ். ஆயர் இல்லத்தில் யாழ். ஆயர் அவர்களால் திருத்தந்தையின் கொடியானது ஏற்றப்படுவதைப் படத்தில் காணலாம்.

# எமது எண்ணம்

## அரசியல் தீர்வு அற்ற நிலையில் பொருளாதார அபிவிருத்தி சாத்தியமா?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை, மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் புலம்பெயர் தமிழர்களிடம் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் தொடர்பாக ஈழத்தமிழ்ச் சமூகம் நிதானமாகப் பரிசீலிக்க வேண்டும். எழுபது வருடகால அரசியல் போராட்டம் இது. ஆனால் இதுவரையும் உரிய தீர்வுகள் இன்றி தொடர்ச்சியாக ஏமாற்றமே விஞ்சிக் காணும் சூழலில் இலங்கை அரசாங்கம் விடுக்கும் அழைப்புகள் குறித்து நுட்பமாகச் சிந்திக்க வேண்டும்.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற வல்லரசு நாடுகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள், வர்த்தகச் செயற்பாடுகள் போன்ற பல திட்டங்களை முன் அறிவித்தல்கள் இன்றி ரத்துச் செய்த இலங்கை அரசாங்கம், புலம்பெயர் தமிழர்களுக்கு முதலீடு செய்ய அழைப்பு விடுத்திருக்கின்றது.

அரசுக்கு - அரசு என்ற அணுகுமுறையில் சர்வதேச நியமங்களுக்கு ஏற்பச் செய்யப்பட்ட ஒப்பந்தங்களைச் சிறிய தீவான இலங்கை ரத்துச் செய்யும் சூழலில், எந்தவிதமான அரசியல் அதிகாரங்கள் - பாதுகாப்புகள் இல்லாத புலம்பெயர் தமிழர்கள் எந்த நம்பிக்கையோடு இலங்கையில் முதலிட முடியும் என்ற கேள்விகள் நியாயமானவை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து குறைந்த பட்சமேனும் மீள புலம்பெயர் தமிழர்களின் முதலீடு களை எதிர்பார்க்கும் நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் மக்களின் முதலீடுகளை எதிர்பார்க்கிறார் என்பது தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில் உரையாற்றியபோதும், இனப்பிரச்சினை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகள் பற்றிய நம்பிக்கையை ஜனாதிபதி வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆகவே தமிழ் உறுப்பினர்களைப் பேச்சுக்கு வருமாறு ஏற்கனவே அழைத்த பின்னணியும். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காணவேண்டும் என்ற நோக்கில் அமைந்தமை என்பது இங்கே கண்கூடு.

எனவே இரண்டு விடயங்களை இங்கே அவதானிக்க வேண்டும். ஒன்று, புலம்பெயர் மக்களின் உதவிகளைப் பெறுவது. இரண்டாவது அரசியல் தீர்வுக்கான பேச்சு என்று கூறி, இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகள் விரிவடைகின்றன என்ற தோற்றப்பாட்டை சர்வதேசத்திற்குக் காண்பிப்பது.

ஆனால் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பெற்ற பட்டறிவு தமிழர்களிடம் உண்டு. அதுவும் புலம்பெயர் தமிழர்களிடம் அந்தப் பட்டறிவு அதிகமாகவே உண்டு என்பதைச் இலங்கை அரசாங்கம் நம்ப மறுக்கின்றது, அல்லது அரசாங்கம் சார்பான தமிழ் முகவர்கள் உர மூட்டுகின்றனர் எனலாம்.

2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்திலே தான் சில சர்வதேச ஒப்பந்தங்கள் செயலிழந்தன. குறிப்பாக 2016 ஆம் ஆண்டு செய்யப்பட்ட கொழும்புத் துறைமுக கிழக்கு முனை அபிவிருத்தி ஒப்பந்தம், ஜப்பான் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் இலங்கையுடன் இணைந்து அபிவிருத்தியை மேற்கொள்வதென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அதற்கு அனுமதிக்கவில்லை. மாறாகக் கொழும்புத் துறைமுகக் கிழக்கு முனை அபிவிருத்தி சீனாவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று இலங்கையின் தலைநகர் கொழும்பில் வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஜப்பான் அரசின் கடனுதவித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இலகு ரயில் சேவைத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் தன்னிச்சையாக ரத்துச் செய்துள்ளது.

திட்டத்தை ரத்துச் செய்வது தொடர்பாக ஜப்பான் அரசுடன் எந்தவிதமான பேச்சுக்களும் நடத்தப்படவில்லை. இலங்கைக் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் அறிக்கையின் படி செப்டம்பர் 24, 2020 அன்று அங்கீகாரம் பெற்றிருந்த நிலையில் இத் திட்டம் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே இது குறித்து நாம் நன்கு சிந்திக்க வேண்டும். உத்தரவாதங்கள் இன்றி பொருளாதார முதலீடுகள் செய்வதால், பாதிக்கப்படப்போவது ஈழத்தமிழ்ச் சமூகம்தான் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# இடமாற்றம் பெறும் யாழ் மறைமாவட்ட குருக்கள்

யாழ் மறைமாவட்டத்தில் சில நிறுவனங்களிலும், பங்குகளிலும், பணியாற்றி வரும் அருட்பணியாளர்களுக்கு யாழ் ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் பணிமாற்றங்கள் வழங்கப் பட்டுள்ளன. பணிமாற்றம் பெறும் அருட்பணியாளர்களின் விபரங்கள் பின்வருமாறு அமைகின்றன.

- அருட்பணி J.A. அருள்தாஸ் - ஆன்மீகக் குரு - யாழ் பல்கலைக்கழகம்
- அருட்பணி J.A. யேசுதாஸ் - பங்குத்தந்தை - புனித யுவானியார் ஆலயம், சுண்டிக்குளி ஆன்மீகக் குரு - மறைமாவட்ட மரியாயின் சேனை
- அருட்பணி P. இராஜசிங்கம் - பங்குத்தந்தை - உரும்பிராய்
- அருட்பணி S.A. அருட்செல்வன் - பங்குத்தந்தை - உடுவில்
- அருட்பணி M. டேவிட் - இயக்குநர் - "அகவொளி" குடும்ப நல நிலையம்.மறை மாவட்ட இயக்குநர் - "அன்பியம்"
- அருட்பணி T. செல்வரட்ணம் - பங்குத்தந்தை - மண்டைதீவு
- அருட்பணி A. றெனோல்ட் ஜேர்ஜ் - உதவிப்பங்குத் தந்தை - புனித யாகப்பர் ஆலயம், குருநகர்
- அருட்பணி R. ஸ்ரலின் - பங்குத்தந்தை - கிறிஸ்து அரசர் ஆலயம், கொய்யாத்தோட்டம்.
- அருட்பணி S. லியோ ஆம்ஸ்ரோங் - விடுமுறை (ஆறு மாதங்கள்)
- அருட்பணி A. லோறன்ஸ் - பங்குத்தந்தை - மிருசுவில்
- அருட்பணி P. இருதயதாஸ் - இயக்குநர் - இறை தியான இல்லம், யாழ்ப்பாணம்
- அருட்பணி M. சோபன் றூபஸ் - ஆசிரியர், மகா வித்தியாலயம், நெடுந்தீவு
- அருட்பணி S. யூட் கமில்ரன் - உதவிப் பங்குத்தந்தை - புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்
- அருட்பணி J. நிலான் யூலியஸ் - உதவிப்பங்குத்தந்தை - புனித திரேசாள் ஆலயம், கிளிநொச்சி
- அருட்பணி E.S.C. மரியதாஸ் - பங்குத்தந்தை - மாங்குளம்
- அருட்பணி A. அன்ரோ டெனிசியஸ் - பங்குத்தந்தை - இரணைப்பாலை
- அருட்பணி S.M.P. ஆனந்தகுமார் - பங்குத்தந்தை - புனித அடைக்கல அன்னை ஆலயம், யாழ்ப்பாணம்
- அருட்பணி சதிஸ்குமார் - ஆசிரியர் - மகாவித்தியாலயம் முல்லைத்தீவு
- அருட்பணி X. பேர்னாட் றெக்னோ - தீவக மறைக்கோட்ட முதல்வர், பங்குத்தந்தை - அல்லைப்பிட்டி
- அருட்பணி H. எரோனியஸ் - பங்குத்தந்தை - பலாலி
- அருட்பணி T.E. தேவராஜன் - பங்குத்தந்தை - ஊறணி
- அருட்பணி J.A.A. நியூமன் - உதவிப்பங்குத்தந்தை - அளம்பில்
- அருட்பணி I.P. தயாபரன் - உயர்கல்வி, பூனே, இந்தியா

# தும்பளை புனித லூர்து அன்னை திருத்தல பெருவிழா

## *02.02.2023 - 11.02.2023*

02.02.2023 நவநாள் வழிபாடுகள் - திருச்செபமாலை மாலை 4.30 மணி

10.02.2023 நற்கருணை விழா - திருச்செபமாலை மாலை 5.00 மணி

*யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெறும்.*

**திருத்தலப் பெருவிழா 11.02.2022 (சனிக்கிழமை)**

முதல் திருப்பலி காலை 5.30 மணி

திருநாள் திருப்பலி காலை 7. 00 மணி

*திருவிழாத் திருப்பலி யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.*

– திருத்தலப் பரிபாலகர்

## திருஅவையில் பெண்களுக்கு ...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

குருத்துவத் துறவற அழைத்தல்களின் பெறுமதி உணரப்பட்டு அதற்குரிய ஆழமான உருவாக்கம் கொடுக்கப்பட வேண்டும், திருமுழுக்கு பெற்றோரின் சமத்துவமும் திரு அவையில் அவர்களுக்குள்ள கடமைகளும் உணர்த்தப் பட வேண்டும், தற்போதைய உலகம் எதிர் கொள்ளும் நெருக்கடிகளுக்குக் காரணமான யுத்தங்கள் சமூகத் தீமைகள் உடனடியாகக் களையப்பட ஆவன செய்யப்பட வேண்டும்,

கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான ஒன்றிப்பு மற்றும் சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பின் அவசியம் வலியுறுத்தப்பட வேண்டும் போன்ற முன்மொழிவுகளை இலங்கை ஆயர் மன்றம் ஆசியக் கண்டத் தயாரிப்பு செயற்பாடுகளுக்காக முன்மொழிந்து வலியுறுத்தி உள்ளது.

## தீர்வுக்காக....

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

மூன்று தசாப்த காலப்போர் நிகழ்ந்துஏறக்குறைய13ஆண்டுகளாயும் இன்னும் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு ஏற்படவில்லை என்பது வேதனையானது.

அண்மைக் காலத்தில் திரும்பவும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு வார்த்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று.

இப்போது ஆரம்பிக்கப்பட்ட இந்த பேச்சுவார்த்தையில் தமிழ்த்தரப்புக்கள் மிகக் கவனமாகவும் அவதானமாகவும் இருக்கும் வகையிலும் சிங்களத் தலைமைகள் ஓரளவு நேர்மையாக இருக்கும் எனப் பரவலாக எண்ணப்படுகின்ற வகையிலும் நல்லது நடக்கும் என நம்புவோம்.

இந்தப் பேச்சுக்கள் வழி இலங்கை நாட்டில் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த தமிழ் கட்சிகள் அனைத்தும் தமது கட்சி முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் மறந்து செயற்பட வேண்டுமெனத் தமிழ் மக்கள் பெயரால் அன்புடன்வேண்டுகிறோம் என் றுள்ளது.


# துறவறத்தில் வெள்ளி விழா




அப்போஸ்தலிக்க
கார்மேல் சபையின்
பல மலர்களில் ஒரு மலரே
கிளாலி மணக்கண்ட
யாக்கோப்பின் புத்திரியே
இருபத்தைந்து ஆண்டுகளில்
பதினைந்து ஆண்டுகளை
மலையக மக்களிடையே
ஒருவராயும்
மீதி ஆண்டுகளை
வட கிழக்கிலும்
கீழ்ப்படிதல் வழிநடாத்த
இங்கிதமாய் செவிசாய்த்து
துறவறத்தில்
வெள்ளிவிழா காண்கின்றீர்.
கடந்த காலத்திற்கு
நன்றி இறைவா
எதிர்காலத்திற்கு
ஆமென் தலைவா

**அருட்சகோதரி எம்.டிலாந்தி AC**

**1998. 10 ஜனவரி - 2023**

Superior. Convent of Our Lady of Lanka
Atchuvely

*குடும்பத்தினர்*

AD

# மகிழ்ச்சியூட்டும் மண்கல(ங்கள)ப் பொங்கல்!!



**பு**துமண் பானை, புத்தரிசி-நெய்-பால் இஞ்சி, ஏலம், மஞ்சள், முந்திரி, திராட்சை என, பழவகைகள், மணக்கும் செங்கரும்பின் சிதறும் தோகை கற்பகத் தரு பனையின் ஓலையும், பனை மட்டையும் பொங்கல் வைக்க உதவும் எரிபொருள். பனையின் கருப்பட்டியே சுவையூட்டும் அரும் பொருள். பனை ஓலையால் பால் பொங்கும், அதன் பின் பனை மட்டையே பொங்கவைக்கும் எரிபொருள். இன்று மண் (பூமி) தாயின் பானையும் இல்லை - இயற்கையின் எரிபொருளும் இல்லை. மண்கல(ங்கள்) பொங்கலா, அது வெண்கல பாத்திரப் பொங்கல்.

நகரில் இருந்தாலும் கிராமத்தில் வாழ்ந்தாலும் சரி, நம் தேசத்தின் நம் தமிழனின் ஆதரிசன சக்தி உழவு. வேளாண்மையும் அது சார்ந்த தொழில்களுமே. அதனைப் பேணி வளர்க்கவே பொங்கல் விழாக் கொண்டாடப்படுகிறது. அதற்குரிய கால்நடைகளைப் பேணுவதும், போற்றுவதும் தமிழன் சிறப்பு. “மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாள்” இறுதிநாள் போகிப்பண்டிகை”.

“தை பிறந்தால் வழி பிறக்கும்” இயற்கைக்கு நன்றி பொதுவான சூரியனை வழிபடுவர். சூரிய பூமிக்கோளத்தின் வடபகுதிக்குப் பயணமாவதை உத்தராயணம் என்பர். மகராசிக்கு பெயரும் மகரசங்கராந்தி என்று “பொங்கல்” வைத்து மகிழ்வர். மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் தெரிந்ததே நமக்கு.

### பொங்கல்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. கூட்டுக் குடும்பம் தொலைத்துவிட்டு தொலைக்காட்சியில், திரையில் (சின்னத்) மூழ்கிடும் இக்காலத்தில் “சுற்றத்தின் அழகு சூழ இருத்தல்” (ஔவை) வேண்டும். குடும்பம் குடும்பமாக அம்மா, அப்பா, தாத்தா-பாட்டி, அண்ணன்-அண்ணி, அக்காள்- தங்கை, பேரன்-பேத்தி இது போன்ற 21 வகை உறவுகள் மகிழ்ந்து இருந்து, கொண்டாடும் பொங்கல் தோழமைப்பொங்கல். முதியோர் மட்டும் வீட்டில் (முதியோர் இல்லத்தில் பிள்ளைகள் ஓரிடம், பேரப்பிள்ளைகள் ஓரிடம் இப்படி வாழ்ந்தால் தோழமை உறவுப் பொங்கல் இனிக்குமா?

வேளாண்மைத் தொழிலில் நண்பர் காளைகள்- பசுக்கள் - கால் நடைகள், சேவல்கள் அவைகளைக் குளிப்பாட்டி, அழகுசீர்படுத்தி “கோமாதா எம் குலமாதா” புகழ்பாடி, திடல், மைதானத்துக்கு அழைத்துச் சென்று, அவற்றின் கழுத்தில் வேட்டி, துண்டு, பரிசுப் பொருள் கட்டி, கொம்பூத, சங்கொலிக்க குரவை ஒலி எழுப்ப, மாடுகளை மொத்தமாக அவிழ்த்து விடுவது மாட்டுப்பொங்கல்.

### இலக்கியப் பொங்கல்

தமிழ் இலக்கியங்கள் பொங்கல் விழா, தை நீராடல் ஏறுதழுவுதல், நெல், கரும்பு பற்றிப் பேசும் இடங்கள் பல உண்டு.

“நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க,
விளைக வயலே வருக இரவலர்
பால்பல ஊறுக பகடுபல சிறக்க”
ஓரம்போகியார்
*(ஐங்குறுநூறு)*

“பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர் சாப
நலியும் நாகமும்
நைந்த நமனுகிங்
கியாதேறுமின்னே -
*(நம்மாழ்வார்)*

“கள் ஆர் உவகைக் கலி-
மகிழ் உழவர் காஞ்சி அம்
குறுந்தறி குத்தி, தீம்சுவை
மென்கழைக் கரும்பின்
நன் பல மிடைத்து பெருஞ்செய்
நெல்லின் பாசவல் பொத்தி”
*(அகழ் நக்கீரர்)*

“கொல்லேற்று கோடஞ்சுவானை
மறுமையும் புல்லாளே ஆயமகள்”
*(கலித்தொகை)*

“வயலே நெல்லின் வேலி, நீடிய
கரும்பின் பின்பாத்தி பன் மலர் பூத்த”
*(அகம், கோவூர்கிழார்)*

“சீர் சான்ற உயர் நெல்லின்
ஊர்கொண்ட உயர் கெற்றவர்”
*(மதுரை காஞ்சி)*

“நெல்லின் முத்தூறுதந்த கொற்ற”
*(புற நானூறு)*

“மதுக்குலாம் அலங்கல் மாலை
மங்கையர் வளர்த்த செந்தீப்
புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்”
*(சீவகசிந்தாமணி)*

“தைத் திங்கள் தண்கயம் படியும்” (நற்றிணை), “நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும் தைஇத் தண்கயம் போல” (ஐங்குறுநூறு) தைத்திங்கள் தண்ணியம் தரினும் (நற்றிணை) “தையில் நீராடி தலைப் படு வாயோ” (கலித் தொகை) இங்ஙனம் பொங்கல் மாட்சி நீராடலின் மாண்பு, நெல்லின் உயர்வு - தமிழ் நூல் காட்டுவன படித்துப் பாருங்கள். பழமொழிகள் பண்பாட்டு மரபுகள், தொன்மை சீர் வளங்கள், விழாவின் மேன்மை, குடும்ப உறவுகள் எனப் பல பொங்கல் விழா தரும் மங்களங்கள்.

### நற்செய்தி காட்டும் பொங்கல்

“ஈசாக்கு அவன் நாட்டில் பயிரிட்டு, வேலைசெய்து அந்த வருடம் நூறு மடங்கு அறுவடை செய்தான். அந்த நாளில் மக்கள் தம் வயலில் உழவு செய்து வாழ்ந்தனர்”

“ரெபேக்கா அவள் தோழியர் ஒட்டகத்தில் பயணித்து தொழிலாளிகளுடன் வயல் காட்டில் வேலைசெய்தாள்” (தொநூ 24:60) தொடக்க நூலில் உழவு - கால்நடை வளர்ப்பு, சேமித்தல், உணவின் பழக்கம், வழக்கம் பற்றிய செய்திகள் உண்டு. “மிருகங்கள் பலியிடல்” (தொநூ 46:1) செய்திகளும் உண்டு.

அறுவடை திருவிழா - அது நன்றியின் விழா - மோசே காலத்திலே உருவானது. இன்று, உலக நாடுகளில் குறிப்பாக, தமிழர் வாழும் 113 நாடுகளில் சிறப்பாக பொங்கல் விழா என்ற பெயரில் நடைபெறுகிறது. இதிலிருந்து கி.பிக்கு முன்பு பொங்கல் விழா கொண்டாடப்பட்டுள்ளது என அறியலாம்.

நீ வயலில் விதைத்து உன் வேலைகளின் பயிர் முதற்பலனை... செலுத்துகிற அறுப்பு கால பண்டிகையை அனுசரிப்பாய்” தொநூ கூற்று. “பூமியின் பயிர் முதிர்ந்து அறுக்கிற காலம் வந்தது”. புளியாத அப்பத் திருவிழா எனப்படும். பாஸ்கு விழா அறுவடை செய்த பார்லி கதிர்களை யாவே கடவுளுக்கு காணிக்கையாக்குவது (லேவி 23:1-14). வாரங்களின் விழா என்ற பெந்தகோஸ்து விழா விளைந்த கோதுமை அறுவடைத் திருவிழா. சுடப்பட்ட இரு கோதுமை அப்பங்களைச் சுட்டுக் கடவுளுக்கு காணிக்கையாக்குதல் (லேவி 23:22, எண் 23:26, இணை 6:10). கூடாரத் திருவிழா எனப்படும் விவசாய விழா எனப்படும் திராட்சைப்பழ அறுவடை விழா.பேரிச்ச ஓலை, செடி, தளிர், மலர் இலைகளை ஆண்டவர்க்குப் படைப்பது. ஏழு நாள் விழா வெளியில் (கொட்டகை) கூடாரம் அமைத்துத் தங்கி கொண்டாடப்படுவது. (லேவி 20:40, 23:33-36, 39:43, இணை 16:13, 31:10). இந்த விழா தமிழர் விழா.

விழாவில் பொங்கல் வைக்கும்போது வைக்கும் பூங்கொத்து (பல மூலிகைச் செடி, கூரைப்பூ என்ற பீளைப்பூ, வேப்பிலை, மாவிலை, வாழையிலை, ஆவாரைப்பூ, பிரண்டை, தும்பை என்ற கூரைப்பூங்கொத்து வைப்பர்.

அத்தனையும் நோய் போக்கும் தாவரங்கள் - நினைவு கொள்க. பனை ஓலை, பனை மட்டை, தேங்காய் கொட்டாங்குச்சியுடன் இணைத்த பனை மட்டையுடன் கூடிய அகப்பை தான்



பயன்படுத்துவர். இன்று ஈய, பித்தளைக் கரண்டிதான் இன்று பயன் பாட்டில் உள்ளது தெரிக. செயற்கையின் வடிவம் இன்று.

### தன்வயமான பொங்கல்

கிறித்தவம் தான் மறைப்பணியில் சென்றடைந்த நாட்டின், மக்களின் தனிப்பட்ட சிறந்த இயல்புக்கு ஏற்றவாறு அவர்கள் ஏற்று அவர்தம் ஞான வாழ்வு ஆக உருமாறும். இயேசு பெருமான் நிகழ்த்திய மறை உண்மைகள் ஏற்ற இடத்தில், பல நாடுகளில் ஒவ்வொருவரிடமும் நிகழ்தல் வேண்டும். இதுதான் “தழுவிய மைத்தல்” என்பர். இக்கொள்கை இராபர்ட் தே நோபிலி அவர்கள் இப் பண்பாட்டு உருவாதம் என்பதை தமிழ் மண்ணில் புகுத்தினார். பல எதிர்ப்புகளைச் சந்தித்தார். அது வரலாறு. அப்படி உருவாக்கியது தான் கிறிஸ்த்தவர் பொங்கலிடுவது ஆகும். கத்தோலிக்க கிறிஸ்த்தவர் பிறப்பால் மொழியால், உணர்வால் தமிழன்தான்.தன்னுடன் வாழும் பிறசமயத்தினர் இயற்கையை வழிபட்டு, நன்றி கூறவும், அறுவடையின் பலன் நன்றி செலுத்தவும், திருமறை நற்செய்தியே அறுவடை திருவிழாக் கொண்டாடியதால் திருமறையினர் பொங்கல் வைக்க நோபிலி வலியுறுத்தினார்.

375 ஆண்டுகளுக்கு முன் தே நோபிலி தம் சபைத் தலைவர் பணி. ஆல்பர்ட் லெயர் சியோவுக்கு கடிதம் எழுதியுள்ளார். வருடத் துவக்கத்தில் இந்து சமயச் சகோதரர்கள் பொங்கல் என்ற ஆடம்பர விழாவைக் கொண்டாடி, தம் தெய்வங்களுக்குப் படைக்கின்றனர். அவர்தம் தெய்வ உருவத்து முன் புதிய பொங்கலைப் படைக்கின்றனர். புதிய (நெல்) அரிசி, பால், நெய் கலந்து பொங்குகின்றனர். ஆகவே, கிறிஸ்தவர்களும் அது மாதிரி நடத்தவில்லை எனில் அது இழிவாகலாம் எனக்கருதி “சிலுவையை நட்டு அதன் முன் பொங்கல் வைக்க அனுமதித்து நான் கூறி உள்ளேன். பொங்கலிடும் அரிசி, பிற பொருட்களை நானே மந்திரித்துக் கொடுக்கிறேன். மக்கள் மனமகிழ்ந்து உள்ளனர்” (சுமார் 70 ஆண்டுகளுக்கு முன், இன்றும் ஒரு சிலர் ஊர்க்கோயில் தீர்த்தம் ஊற்றித்தான் பொங்கல் வைப்பர்). சிலுவையை நட்டு வைக்காத வீட்டில் பொங்கல் பொங்கவில்லை என்றும் மற்றும் இருவர் சிலுவை நட்டுப் பொங்கலிடப் பால் பொங்கிற்று என்ற செய்தியைக் கூறுகிறார்.


### நாமும் தமிழரே

சமய, சமூக நல்லிணக்கம் ஒருமைப்பாடு, உணர்வு மேலோங்கியதால் இன்று தமிழன் என்ற உணர்வு பொங்கி எழ, கிறிஸ்தவர்களும் தமிழரே! தமிழர் திரு-நாள் தைத்திங்கள் முதல்நாள் அன்று பல இடங்களில் ஊர்களில் 1 பொங்கலிடல், மாட்டுப்பொங்கல், மஞ்சு விரட்டு, . அருட்பணியாளர்களின் உந்துதலுடன் கிறித்தவ சமய எழுச்சியுடன் திருப்பலி - பொங்கல் அர்ச்சிப்பு என நடைபெறுகிறது. பங்கு ஆலயத்திலும் “பொங்கல்” சிறப்புற நடக்கிறது

திருத்தந்தையர்கள் 6 ஆம் சின்னப்பர், 2 ஆம் அருள் சின்னப்பர், 1988 பிலிப்பைன்ஸ் ஆயர்கள் மன்ற முடிவு - புரட்சித்திருத்தந்தை இந்நாள் பிரான்சிஸ் இயற்கையைப் பாதுகாப்போம் காட்டுவோம் என்ற கொள்கைக்கு பொங்கல் விழா ஒரு மாபெரும் கொடை - கொண்டாடுவோம். மகிழ்வுறுவோம் தைத்திருநாளில்.

நன்றி :- நம்வாழ்வு

## நன்றியோடு பொங்கிடுவோம்



*உலகமெல்லாம் வாழ்வதற்காய்*
*உண்டி கொடுக்கும் உழவர்தினம்*
*உள்ளங்களில் உவகை பொங்க*
*நன்றியோடு பொங்கிடுவோம்*

*ஏர் எடுத்து வயல் உழுது*
*பருவம் பார்த்து நெல் விதைத்து*
*நாற்புறமும் வரம்பு கட்டி*
*மழைநீரைத் தேக்கி வைத்து*
*களையெடுத்து நெற்பயிரை*
*செழிப்போடு வளர வைத்து*
*கதிர்முற்றித் தலைசாய்த்து*
*மண்ணை முத்தமிடும் வேளையிலே*
*அரிவி வெட்டி நெல்லெடுத்து*
*அரியாக்கிக் கொழித்தெடுத்து*
*முற்றத்திலே கோலமிட்டு*
*சுற்றிவர வாழை நட்டு*
*கரும்போடு மாவிலையும்*
*தோரணமும்*
*அழகாகத் தொங்கவிட்டு*
*களிப்போடு ரசித்திடுவோம்*

*புதிதாய்ச் செய்த அடுப்பின் மேல்*
*புதுப்பானை தனைவைத்து*
*பட்டுடுத்தி எல்லோரும்*
*குடும்பமாகச் சுற்றி நின்று*
*வயல் தந்த புது அரிசி*
*பானையிலே இட்டிடுவோம்*
*வெந்து வரும் வேளையிலே*
*நெய்யோடு சர்க்கரையும்*
*பாலுமிட்டுக் கலந்திடுவோம்*
*கதிரெழுந்து ஒளி வீச*
*பொங்கல் பானை பொங்கிவர*
*மகிழ்வினிலே நிறைவு கண்டு*
*உவகையினால்*
*உள்ளம் பொங்கும்*
*தலை வாழையிலை பரப்பி*
*அதன்மேலே பொங்கலிட்டு*
*மோதகமும் வடையும் சேர்த்து*
*குடும்பமாக அமர்ந்திருந்து*
*மகிழ்வோடு உண்டிடுவோம்*

*அயலவரும் உறவுகளும்*
*வாழ்த்தவரும் வேளையிலே*
*கனிவோடு வரவேற்று*
*அன்பியமாய்ப் பகிர்ந்திடுவோம்*
*உயிர்கள் வாழ உணவு தரும்*
*அனைவருக்கும்*
*நன்றி சொல்வோம்*
*முழுமுதலாய் அருள்பொழியும்*
*இறைவனைப் போற்றிடுவோம்*

அளவையூர் அமலன்

# யாழ் ஆயர் பேரருட்திரு யஸ்றின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் தனித்துவமான கல்விப்புலப் பங்களிப்பு

அருட்பணி இராசேந்திரம் ஸ்ரலின்



**அறிமுகம்:**

கல்வித்துறை என்பது ஆயர் அவர்களுக்கு இறைவன் கொடுத்த தனித்துவமான கொடையாகும். யாழ் சம்பத்தரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் போது ஆயர் அவர்கள் ஆற்றிய உரையில் கல்வி பற்றி நல்லதொரு கருத்தைக் கூறினார். அதாவது 'கல்வி என்பது மாணவன் பாடசாலையை விட்டு விலகிய பின்னர் அவர் மனதில் தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் விடயமே.' இது முற்றிலும் உண்மையான கூற்றாகும்.

இக்கூற்றை அவர் கூறியதன் பின்னணி அவர் கல்விப்புலத்தில் மிகவும் தேர்ச்சி பெற்ற ஒருவாராக விளங்கி வருகின்றமையேயாகும். கல்வியானது மாணவனின் ஆளுமையை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்கின்றது என்பது அவரது அனுபவ உண்மையாகும். அத்தோடு கல்வியின் மூலம் சமுதாயத்தை முன்னேற்ற முடியும் என்பது அவரது இன்னொரு கருத்தாகும். இரண்டாவது கருத்தை சிறந்த மறைபரப்பாளரான நல்லூர் சுவாமியும் கொண்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் அல்லலுறும் நமது இளைஞர்களுக்கும் யுவதியினருக்கும் வேலை வாய்ப்பு வழங்கும் கருவியாகவும் கல்வி விளங்குகின்றது என்ற நல்ல நம்பிக்கையோடுதான் ஆயர் அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். ஆயரின் பல் வகைக் கல்விப்புலப் பங்களிப்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

**1. அல்லைப்பிட்டி சர்வதேசப் பாடசாலை:**

இது முற்றும் முழுதாக ஆயரது திட்டத்தில் உதித்த பாடசாலையாகும். கல்வித்துறையில் சிறந்தோங்கும் மொன்பேர்ட் சபை அருட்சகோதரர்களை இந்தியாவிலிருந்து அழைத்து வந்து இத்திட்டத்தை நிறைவேற்றினார். குறுகிய காலத்தினுள்ளேயே இப்பாடசாலை கட்டப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டமை ஒரு சாதனையே எனலாம். இப்பாடசாலை ஆங்கிலவழிக் கல்விக்கூடமாக விளங்குவதால் தீவுப் பகுதி மாணவர்களுக்கு மாத்திரமன்றி ஏனைய இடங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மேலும், இப்பாடசாலை யாழ்ப்பாணம்-ஊர்காவற்றுறை பிரதான வீதியில் அமைந்துள்ளமையானது தீவுப் பகுதிக்கு ஒரு எடுப்பான தோற்றத்தைக் கொடுத்துள்ளது.

**2. கத்தோலிக்கக் கல்லூரி.**

இக்கல்லூரியை யாழ் மரியன்னை பேராலயத்தின் முன்பாக உள்ள வெளியரங்கில் கட்டி அதைச் சிறந்த கல்விக்கூடமாக உருவாக்குவதே ஆயரின் சிறந்த திட்டமாகும். இது அகவொளி குடும்பவள சேவை நிலையம், புனித பிரான்சிஸ் சவேரியார் உயர்நிலைக் குருமடம், யோசப் வாஸ் இறையியல் கல்லூரி, திருச்சிலுவைக் கன்னியர் சபை தாதியர் பயிற்சிக் கல்லூரி, திரு மறைக் கலாமன்றக் கலைக்கல்லூரி போன்றவற்றை உள்ளடக்கிய கல்லூரியாக விளங்க உள்ளது. ஆரம்பக் கட்ட வேலையாக இப்பகுதி முற்றிலும் துப்பரவாக்கப்பட்டு மணலும் பறிக்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்கான அரச அனுமதி கிடைத்ததும் விரைவாக இது கட்டிமுடிக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என நம்பலாம். ஆயர் அவர்கள் சில மாதங்களிற்கு முன்னார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்காவைச் சந்தித்தபோது இக்கல்லூரியின் தேவையை எடுத்துரைத்தார். அவரும் இத்திட்டத்திற்குத் தன்னாலான பங்களிப்பை வழங்குவதாக வாக்களித்துள்ளார்.

**3.மூன்றாம் நிலைக்கல்விப் பங்களிப்பு:**

அகவொளி நிறுவனத்தின் உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமாப் பயிற்சியானது அயர்லாந்து பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற ஒன்று. ஆனால் அரச அங்கீகாரம் பெறுவதே மாணவர்களுக்குத் தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தரும் என்று கருதி பல்கலைக்கழ அங்கீகாரம் பெறவேண்டும் என்று விரும்பினார். அதற்காக கொழும்பிலுள்ள அக்குவனஸ் கல்லூரி அதிபரோடு கலந்துரையாடுமாறு என்னை அறிவுறித்தினார். அங்கு சென்று இது பற்றி அதிபரோடு கலந்துரையாடினேன். ஆனால் இவ்வகைப் பயிற்சிக்கு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் சான்றிதழே பெரிதும் உதவும் என்று தெரிந்ததும் அதில் பதிவு செய்வதற்கான ஊக்கத்தையும் அளித்து வருகின்றார். அத்தோடு உள ஆற்றுப்படுத்தல் தொடர்பான பாடநூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கும் ஊக்கம் அளித்து வருகின்றார். மேலும் பற்றிசீயன் நிறுவனத்தை சலேசிய சபைக் குருக்களிடம் ஒப்படைத்து அதன் மூலம் மூன்றாம் நிலைக் கல்வியை அளித்து வருகின்றார். முழங்காவிலிலும் கரடிப்போக்கிலும் தொழிற்பயிற்சிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டதும் மூன்றாம் நிலைக் கல்விமூலம் வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்கேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

**4.இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி:**

கொத்தணிப் பாடசாலை முறை வந்தபோது 14 பாடசாலைகளின் கொத்தணி அதிபராக இவர் விளங்கியமை பெருமைக்குரிய ஒன்றாகும். கலாநிதிப் பட்டம் பெற்ற பின்னர் பல வருடங்களாக இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் அதிபராக விளங்கினார்.

கலாநிதிப் பட்டத்தோடு அதிபராகப் பணியாற்றிய ஒருவர் என்றால் அது நமது ஆயரே. இப்பாடசாலைக்கு மிகவும் தேவைப்பட்ட கட்டடத்தொகுதி ஒன்றைக் கட்டி முடித்து மாணவர்களின் கல்வி வளரச்சிக்கு முக்கிய பங்களிப்புச் செய்தார். இவரது பணிக்காலத்தில் விளையாட்டுத் துறையிலும் பாரிய வளர்ச்சி ஏற்பட்டது. அகில இலங்கை உதைபந்தாட்டப் போட்டியில் இப்பாடசாலை அணி முதலிடம் பெற்று வரலாறு படைத்தமை ஒரு முக்கிய மைல் கல்லாகும். இந்திய இராணுவத்தினர் மாணவர்களைக் கைது செய்து துன்புறுத்தியபோது அவர்களை விடுவிக்கப் பல முயற்சிகள் மேற்கொண்டார். அப்போது கீழ்மட்டத்தினர் அனுமதி வழங்காமல் இடைஞ்சலாகச் செயற்பட்டனர். ஆனால் இவரோ மனம்சோராது மீண்டும் மீண்டும் வெவ்வேறு பாதைகளைப் பயன்படுத்தி உயர்மட்ட அதிகாரியைச் சந்தித்து மாணவர்களை மீட்டு வந்துள்ளார். அவ்வளவிற்கு இவர் தன் மாணவர்களை அன்பு செய்து வந்தார். மாணவர்கள் தாம் மாண்புள்ளவர்கள், மதிப்பிற்கு உரியவர் என உணருமாறு அவர்களைச் சப்பாத்துப் போடவைத்து சீருடை அணிய வைத்து பாடசாலைக்கு வரச் செய்தார். ஏனைய நகரப் பாடசாலைகளைவிட இப்பாடசாலை தனது தரத்தில் எவ்விதத்திலும் குறைவானது அல்ல என்பதை மாணவர் உணர்ந்து மகிழ்ச்சியோடு கல்வி கற்க வழிவகுத்தார்.

**5.யாழ் புனித சம்பத்தரிசியார் கல்லூரி அதிபராகப் பங்களிப்பு:**

புனித ஹென்றி அரசர் கல்லூரியிலிருந்து ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்களின் வேண்டுகோளின் பேரில் யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரிக்கு மாற்றலாகி வந்து இவர் ஆற்றிய பணிகள் பல வடமாகாணத்தில் மிகவும் முக்கிய முன்னோடிப் பணிகளாக விளங்கின. வடமாகாணத்தில் ஆங்கில வழிக் கல்வியை அறிமுகம் செய்தார். இதன் பின்னரே ஏனைய பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டிலுள்ளவர்களை அழைத்து இங்கு ஆங்கிலம் கற்பிக்க வழி செய்தார். அயர்லாந்திலிருந்தும் ஆங்கில ஆசிரியர்களை வரவழைத்து இங்கு கற்பிக்க ஆவன செய்தார். இப்பாடசாலையின் ஆங்கில ஆசிரியர் ஒருவரை அயர்லாந்துக்கு அனுப்பி அங்கு பயிற்சி பெற்றுவர ஒழுங்கு செய்தார். மேலும் 100 பேர் வரை அமரக்கூடிய ஆசிரியர்களுக்கான மாநாட்டு மண்டபத்தை உருவாக்கினார். இதனை ஏனைய பாடசாலைகளும் பின்பற்ற ஆரம்பித்தன. பழைய மாணவர் சங்கத்தை நல்ல முறையில் மீள் ஒழுங்கு செய்து அவர்களுக்குத் தனித்தனியான பொறுப்புகளைக் கொடுத்து அவர்களைப் பங்களிப்புச்செய்ய வைத்தார். மாணவர்களின் கல்வியில் மேலதிக தேடல் முக்கியம் என்று கருதி நூலகத்திற்கு வேண்டிய நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு வருடா-வருடம் மூன்று இலட்சம் ரூபாவை ஒதுக்கும் முறையை அறிமுகம் செய்தார். இப்பாடசாலையிலேயே முதல் முறையாகப் பரிகாரக் கற்பித்தல் முறை என்ற எண்ணக்கருவை அறிமுகம் செய்து வெற்றி கண்டவர். அடைவுகளில் பின்தங்கியிருந்த மாணவர்களுக்குப் பாடசாலை நேரம் முடிந்ததும் சிற்றுண்டி வழங்கி இலவசமாக விசேட வகுப்புகளை ஒழுங்கு செய்து சித்தியடைய வைத்தது இவரது தனித்துவமான பங்களிப்புகளில் ஒன்று.

**6.பாடசாலைகளுக்கான பங்களிப்பு:**

பாடசாலை மாணவர்களின் உருவாக்கத்திற்குக் குருக்கள் பங்களிப்புச் செய்யமுடியும் என்று நம்பிக் குருக்களை பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாகவோ அதிபர்களாகவோ நியமிக்கும் இவரது ஆற்றல் போற்றப்படவேண்டியதே. புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு அதிபராக அருட்தந்தை றொபின்சன் யோசப் அடிகளாரை நியமித்து அங்கு சிறந்த கல்விப் பெறுபேறுகள் கிடைக்கச் செய்தமை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இவர் செய்த உன்னத பங்களிப்பாகும். அவ்வாறே அருட்தந்தை விஜின்ரஸ் அடிகளாரை கரவெட்டி திருஇருதயக் கல்லூரிக்கு நியமித்தமை முக்கியமானது. அவர் தற்போது அங்கு உதவி அதி-பராக விளங்குகின்றார். அதிபராகி மாணவர்களின் நல்ல உருவாக்கத்திற்கு மேலும் பங்களிப்புச் செய்யும் காலம் வரும் என்பது நிச்சயம். கிளிநொச்சிப் பிரதேசத்தில் யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி போன்ற இன்னொரு பாடசாலையை அமைக்க வேண்டும் என்பது ஆயரின் இலட்சியக் கனா. இதற்கு சலேசியச் சபைக் குருக்களின் உதவியோடு கரடிப்போக்கில் ஆரம்பக்கல்விப் பாடசாலை ஆரம்பித்து அது இயங்க வழியமைத்தார். அங்கு க.பொ.த (உயர்தரம்) வரையான வகுப்புகள் கொண்ட பாடாசலையாக அபிவிருத்தி செய்வதே ஆயரின் திட்டமாகும். மேலும், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் பாடசாலையின் கட்டட வளமின்மையைக் கருத்திற்கொண்டு கோயில் வளவுக்கு வெளியே அருகாமையிலுள்ள காணி ஒன்றில் ஒரு புதிய கட்டடத்தொகுதி உருவாகுவதற்கும் இவரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இதனால் கோயில் வளவு சுருங்கிப்போய்விடாது தடுக்கவும் முடிந்தது.

**7. மறையலை சமூகத் தொடர்பு நிலையம்:**

இந்நிறுவனத்திற்கான கட்டடம் ஆரம்பம் தொடங்கி இறுதிவரை ஆயராலேயே கட்டி முடிக்கப்பட்டது. இதன் தொலைக்காட்சிச் சேவையை அருட்பணி ஸ்ரீபன் அடிகளார் சிறப்பாக நெறிப்படுத்தி சமய, கல்வி மற்றும் பல சமூகத் தேவைகளை பூர்த்திசெய்யும் விதமாக இயக்கி வருகின்றார். இதற்கு ஆயரின் ஊக்கமளித்தல் உயர்ந்தது. இந்நிலையம் மறைக்கல்வி, அறிவு போன்றவற்றின் வளர்ச்சிக்குப் பல்வேறு பங்களிப்புகளை சமூகத்திற்கு வழங்கி வருகின்றது. அத்தோடு யாழ் மறைக்கல்வி நிலையத்தை புனருத்தாரணம் செய்து புதுப்பொலிவு பெற வைத்துள்ளார். அந்த வகையில் மறைக்கல்விக்கான இவரது பங்களிப்புக் கணிசமானது.

**8. வறிய மாணவர்களுக்கான புலமைப் பரிசில்:**

வறுமையின் சுமையோடு வாழ்ந்து, கல்வி கற்கத் தகுதியான மாணவர்களுக்கு பங்குத்தந்தையின் பரிந்துரையோடு அவர்களது கல்விக்காலத்தில் நிதி உதவி வழங்கி ஊக்குவிக்கின்றமை பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைகின்றது. இதே பணியை அவர் கியூடெக் நிறுவனத்தின் ஊடாகவும் மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. பெற்றோரற்ற வறிய மாணவர்கள் கல்வியைக் கைவிட்டுத் தொழிலில் ஈடுபட்ட போது அவர்களைச் சந்தித்து மீளப் படிக்க வைத்து அவர்கள் சிறந்த தொழில்களில் பணியாற்ற அவர்களை உருவாக்கினார்.

மேலும் கல்லூரிப் பணியோடு நின்றுவிடாது அயலிலுள்ள வறிய கிராம மக்களைச் சந்தித்து அவர்களுக்குக் கல்வியின் அவசியத்தை எடுத்துரைத்துத் தம் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்பிவைக்கச் செய்துள்ளார்.

(தொடரும்...)

# காவலன் கலசம்

## சிறுகதை

# புதுவருடப் பரிசு

"திராட்சை மது அருந்திக் குடிவெறிக்கு ஆளாகாதீர்கள். இது தாறுமாறான வாழ்வுக்கு வழிகோலும். மாறாக தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுங்கள்" *(எபே-5:18)*

அப்பா இவ்வருடம் புதுவருடப் பிறப்பிற்கு எமக்குப் பரிசு தருவார் என அந்த இரண்டு சிறுவர்களும் காத்திருந்தார்கள். ஆனால் தந்தையோ நிறைபோதையில் இருந்ததால் அவர்கள் நேரில் கேட்கப் பயந்தார்கள். அவர் வெளியே சென்றபின் அவர் கொண்டு வந்து வைத்திருந்த பெரிய பைக்குள் நிச்சயம் தங்களுக்குப் பரிசு இருக்கும் என்ற நம்பிக்கையில் பையைத் திறந்து அதற்குள் இருந்த பொருட்களைப் பார்த்ததும் அதிர்ச்சியும், வேதனையும், ஏமாற்றமும் அந்தப் பிஞ்சு உள்ளங்களைப் பிழிந்தெடுத்தன.

பைக்குள் இரண்டு பியர் போத்தல்களும், சாராயப் போத்தலும், மிக்ஸர், முறுக்குப் பொட்டலங்களும் இருந்தன. சமையலறையில் இருந்த பாட்டியிடம் சென்று இருவரும் சொல்லியழுதபோது அவர் குழந்தைகளை அணைத்து ஆறுதல் கூறினாலும் மனைவி இறந்த ஒரு வருடத்துக்குள் தன் நேசமகன் இப்படியாகி விட்டானே என்று அவர் மனம் அழுதது.

புதுவருட தினத்தன்று அப்பா பரிசு தராது விட்டாலும், பிள்ளைகள் அப்பாவுக்கு பரிசு கொடுக்க நினைத்தார்கள். அவர் வருகைக்காகக் காத்திருந்து அவர் வந்ததும் கைகளைப் பற்றி "அப்பா … வாங்க, நாங்க உங்களுக்குப் புதுவருடப் பிறப்பு பரிசு தருகிறோம்.." என்று அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். அங்கு மேசையில் அப்பா கொண்டு வந்திருந்த பியர் போத்தல்களும், சாராயப் போத்தலும் திறந்து வைக்கப்பட்டு, கண்ணாடி டம்ளர்களோடு தட்டுக்களில் மிக்ஸர், முறுக்கு என்பனவும் ஆயத்தமாயிருந்தன.



அப்பா அதிர்ந்து போய் விழிகள் தெறிப்பதுபோல் பார்த்துக்கொண்டிருக்க மூத்தவள் கிளாஸ்களில் சாராயத்தை ஊற்றி, தம்பியின் கிளாசோடு முட்டி விட்டு, வாயில் வைத்து இரண்டு மிடறு விழுங்கியிருப்பாள், "டேய்…" உயிரே போனதுபோல அலறியபடி பாய்ந்து சென்று தன் மகள்மாரைத் தாறுமாறாக அடித்தான். அழுகைக் குரலில் "அம்மா… பாத்தீங்களா… இந்த அநியாயத்தை.." என்று தழுதழுக்க *'தந்தை எவ்வழியோ மைந்தர்களும் அவ்வழி…'* பெரியவங்க சும்மாவா சொன்னாங்க என்று வேதனைக்குரலில் கூறியபடி "தொண்டை எரியுது… வாய் எரியுது…" என்று அழுத சிறுவர்களை அணைத்துக் கொண்டு வெளியே சென்றார்.

அன்று யாருமே சாப்பிடவில்லை. பிள்ளைகள் அழுதபடி தூங்கி விட்டார்கள். அம்மா மெதுவாக எழுந்து ஓசை வராமல் உள்ளறையை எட்டிப் பார்த்தார். அங்கு மகன் தலை கலைந்து, முகம் வெளிறிச் சுவரோடு சுவராகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். சாராயப் போத்தல்களும், டம்ளர்களும் சிதறிக் கிடந்தன. கண்களில் கண்ணீர் வழிந்தது.

அம்மாவுக்குள் நம்பிக்கை பிறந்தது. தன் பேரப்பிள்ளைகள் கொடுத்த புதுவருடப் பிறப்புப் பரிசு என்றும் மறக்க முடியாத நினைவுப் பரிசு. இனிமேல் மகன் குடிக்க மாட்டான் என நினைத்து மகிழ்ச்சியோடு குழந்தை இயேசுவுக்கு நன்றி கூறினார்.

ஞானேஸ்வரி சூசைதாசன்

## இளையோர் காவியம்

எப்பவும் கருத்தடை செய்வது இல்லை
மிருக ஜாதி அது மட்டுமல்ல
மிருக ஜாதி அழிப்பதுமில்லை கரு
கர்ப்ப காலத்தில் மிருக ஜாதி
கொள்வதில்லை தாம்பத்திய உறவு

புனிதமான மிருக ஜாதியின்
ஓலைக் குடிசையில் தான் பிறந்தார்
இயேசு பாலன் - பிறப்பு
மாற்றங்களின் நுழைவாயில்

நீ உண்மையாக மாறுவது தான்
தேடல்களின் பாதை
மனம் தூய்மையா இருந்தால்
சாபங்களாக மாறுவதில்லை வரங்கள்

நீ நீயாக இருக்கலாமே தவிர
தனியாக இராதே

இப்போது தனிமை என்பது
செல்போன்களுக்கு இரை

நீ விதைக்கப்பட வேண்டிய விதை
உன்னில் முளைக்கவே கூடாது
சுயநலன்கள் விளைந்த
போதைப் பொருட்கள்

நீ கைவிடப்பட வேண்டியதை
கைவிட்டால்
உன்னில் இருந்து
உனக்கு மீட்பு

நீ மக்களை நேசித்தால்
உன்னால் உலகத்துக்கு மீட்பு

– உயிரோவியன்



# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**

**பெருநிலப்பரப்பின் கடினமான பணிகள்**

குடும்பங்களைத் தரிசிப்பது, திருவருளடையாளங்களை வழங்குவது, திருமணங்களை நிறைவேற்றுவது, அல்லது சீராக்குவது, முதியோர் மறையறிவு வழங்குவது போன்ற பல கடினமான பணிகள். போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர், தங்குமிடம் போன்ற பல்வேறு வசதிக் குறைவுகள் மத்தியில் இடம்பெற்றன.

இவை யாவும் மக்களின் வசதிக்கேற்பவே நடந்தன. ஏனெனில் ஞாயிறு தினத்தில் கூட வயல் மற்றும் தோட்ட வேலைகள் காரணமாக ஒரு நாள் சம்பளம், கூலி கிடைக்காவிட்டால் அடுத்த நாள் சமைத்துண்ண முடியாது. எனவே மக்களின் வசதி கவனத்தில் கொள்ளப்பட்ட அதேவேளை பலர் கத்தோலிக்க நம்பிக்கையின்பாற்பட்டு அருட்பணியாளர்களுடன் ஒத்துழைத்து அவர்களின் பணிக்கு உறுதுணையாகவும் இருந்தனர்.

**பாரம்பரியத்தினரின் இடையூறு**

மறையாசிரியர்களாகவும் பாடசாலை ஆசிரியர்களாகவும், அரச உத்தியோகத்திலும் இருந்த பலரின் ஒத்துழைப்பு இருந்ததையும் மறுக்க முடியாது. அதேவேளை இந்திய வம்சாவளித் தமிழர்கள் மத்தியில் அருட்பணியாளர்கள் மிகவும் சிரமத்துடன் பணியாற்றிய வேளை, அங்கு குடியேறிய குடாநாட்டு மற்றும் தென்பகுதிப் பாரம்பரியக் கத்தோலிக்கர் பலர் தாம் ஏற்கெனவே கொண்டிருந்த ஆதிக்க மனப்பான்மையையும் சமூக வேறுபாடுகளையும் அங்கும் நிலைநாட்டத் தவறியதில்லை. பல இடங்களில் அருட்பணியாளர்களுக்கு இவ்விடயம் சிக்கலைக் கொடுத்தது.

மக்களோடு மக்களாக வாழ்ந்து சிறுவர் மறைக்கல்வியிலும் கூடுதலாக வளர்ந்தோர் மறையறிவு வழங்கல் மிகவும் அவசியமாக இருந்தது. தற்போதும் பல பங்குகளில் காணப்படுவது போல மறையறிவில் அறியாமை காரணமாகவும், வேறு சமயங்களைச் சேர்ந்தவர்களைக் கத்தோலிக்கர் பலர் திருமணம் செய்ய வேண்டிய கட்டாயச் சூழ்நிலையால், இவற்றைச் சிரமத்துடனும் பொறுமையுடனும் சீராக்குவதும், வேறு கிறிஸ்தவ சபைகளின் ஊடுருவல்களில் இருந்து கத்தோலிக்கரைப் பாதுகாப்பதும் பிரதான விடயங்களாய் இருந்தன.

**மறைசாட்சிய வாழ்வு**

அருட்பணியாளர்களே முதலுதவிப் பெட்டியுடன் சென்று உடல்நோய், உள-நோய் தீர்க்கும் வைத்தியர்களாகவும், காணிப்பிணக்குகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நீதிபதிகளாகவும் செயற்பட வேண்டிய தேவை இருந்ததால், சிறந்த மறைசாட்சிய வாழ்வாகவும் இது அமைந்ததெனலாம். எனவே இந்த இடங்களில் இவர் கூடிய கவனஞ்செலுத்த வேண்டியவராக இருந்தார்.

மக்களோடு மக்களாகப் பணியாற்றிய அருட்பணியாளர்களின் பங்குமனைகளும், ஆலயங்களைப் போன்று களிமண்ணால் கட்டப்பட்டு வைக்கோலால் வேயப்பட்டதாகவே இருந்தன. இவ்வாறான கடினமான பிரதேசங்களில் பணிச் சிரமங்களை உணரவும், சிறந்த உருவாக்கற் பயிற்சியைப் பெறவும், விடுமுறைக் காலங்களில் அருட்பணி மாணவர்களையும் நிரந்தர மறைப்போதகர்களையும் இவர் இவ்விடங்களுக்கு அனுப்பிப் பயிற்சியளித்தார். மேலும் இந்த இடங்களில் வாழ்ந்த மக்களை ஓர் ஆயன் தனது ஆடுகளை அறிந்திருப்பது போலத் துல்லியமாக அறிந்திருந்தார். எடுத்துக்காட்டாக 1996இல் வவுனியாவில் பணியாற்றிக் கொண்டிருந்த மறைப்போதகர் எஸ். அந்தோனிப்பிள்ளையிடம், காட்டுக்குள்ளே ஒரு சில மைல்கள் தூரத்தில் இருந்த வீரபாகு குடும்பத்தின் திருமணத்தைச் சீராக்கும்படி கூறியமையைச் சுட்டிக்காட்டலாம். யாழ்.- கொழும்பு பிரயாண வேளைகளில் ஆயர் தமது அருட்பணியாளர்களையும் அவர்கள் பணியாற்றிய பங்கு மக்களையும் இப்பெரு நிலப்பரப்புகளில் அடிக்கடி சென்று சந்திப்பார். இது அருட்பணியாளர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், மறைபோதகர்களுக்கு மிகவும் ஊக்கமளித்ததெனலாம்.

**பண்பாட்டு மயமாக்கல் முயற்சிகள்**

மாற்றியமைத்தல் தொடர்பான இறையியலின் அடிப்படை, கிறிஸ்து இயலின் மனிதவதார மறையுண்மையில் இருந்தும் திருச்சபையின் "கத்தோலிக்க" ப் பண்பில் இருந்தும் எழுகின்றது. எந்த மறையாக இருந்தாலும் அது அந்த மக்களின் சுதேச பண்பாட்டை உருவாக்கி வடிவமைக்கும் ஓர் பண்பாட்டுக் கூறாகும். எனவே கத்தோலிக்கர்கள் கிறிஸ்துவை யாழ். மறைமாவட்ட மக்களுக்குக் கொடுப்பதற்குச் சுதேச மயமாக்கல் இன்றியமையாததாகும்.

மாற்றியமைத்தல் அல்லது பொருத்தப்பாடாக்குதல் அல்லது பொருத்தியமைத்தல் என்னும் முறை, சங்கத்துக்கு அடுத்து வந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மேய்ப்புப்பணி சார்ந்த மறை அறிவிப்புச் செயற்பாடாகும். ஆயினும் காலணித்துவ ஆட்சியின் ஆரம்பத்தில் வடபகுதியில்

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

கத்தோலிக்க மறையறிவிப்பாளர்கள் தாம் எதிர்கொண்ட இந்நாட்டின் கலாசாரங்கள், பண்பாட்டு அம்சங்கள், சமயச்சடங்குகள் யாவும் தமது "சத்தியவேத" த்திற்கும், மெய்யான கடவுளுக்கும் எதிரியான சாத்தானின் ஆதிக்கத்தில் ஏற்பட்டதென்ற அறியாமையிலும், இந்து மதம் முன்வைக்கும் பலதெய்வக் கோட்பாட்டுவாதத்தின் பொருட்டும் கிறிஸ்தவ மறையே சத்தியவேதம் என்ற உணர்விலும் உந்தப்பட்டு மறையறிவிப்புப் பணியில் ஈடுபட்டனர். இதனால் இம்மறையின் விடுதலை உணர்வால் கவரப்பட்ட சுதேசிகளும் இவ்வெண்ணத்திலேயே ஏறக்குறைய நானூறு ஆண்டுகளாக வளர்க்கப்பட்டனர்.

1962-1965 வரை இடம்பெற்ற, ஆயர் எமில் நேரடியாகப் பங்குபற்றிய 02ஆம் வத்திக்கான் சங்கத்தின் பரிந்துரைகளால் யாழ். மறைமாவட்டத்தில் கத்தோலிக்க மறைக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் இடையிலான உறவு பற்றிய ஆழமான தேடல் நிகழ்ந்தது. கடந்த அறுபது ஆண்டுகளாகத் தமிழ்ப் பண்பாட்டோடும், வேறு மறைகளின் பொதுவாழ்வியல் அம்சங்களுடனும் முரண்படா வண்ணம் இணைந்து செல்லக்கூடிய வகையில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(தொடரும்…)

# காவலன் கலசம்

## திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட்

# விளக்கின் வெளிச்சம்

## அறிவுச் சுடர் அணைந்தது!



ஒவ்வொரு திருத்தந்தையும் உன்னதமானவர்கள். கிறிஸ்துவின் பிரதிநிதியாக, திரு அவையின் தலைவராக, உரோமையின் ஆயராக, பேதுருவின் வழித்தோன்றலாக, நல்லாயனாக திரு அவைக்குப் பெருமை சேர்ப்பவர்கள்.

265 வது திருத்தந்தையாகப் பொறுப்பேற்று, 7 ஆண்டுகள், 10 மாதங்கள், 9 நாட்கள் (மார்ச் 19, 2005 - பெப்ரவரி 28, 2013) திருத்தந்தையாகத் திரு அவையைத்திறம்படவழிநடத்தியுள்ளார். இவர் ஞானத்தின் பிறப்பிடம். தன்னடக்கத்தின் உறைவிடம். தாழ்ச்சியின் மனித வடிவம். அறிவின் திருப்பீடம்! ஒரு போர்வீரனாக, குருவாக, பேராசிரியராக, பேராயராக, கர்தினாலாக, திருத்தந்தையாக, ஓய்வுக்குப் பிறகு செப வீரராக 95 வருட கால நிறை வாழ்வில் வானவில்லாய் ஏழு நிலைகளில் பரிணமித்தவர். நாசிப் படையில் போர்வீரனாகத் தன் வாழ்வைத் தொலைத்தவர், மரணிக்கும்போது திரு அவைக்காகத் திரு அவையின் தாய் (Mater Ecclesiae) இல்லத்தில் இறுதி வரை செபிக்கும்போர் வீரராக ஃ மரியின் மகனாக வாழ்வைக் கண்டடைந்தார்.

விசுவாசத்திற்கும், பகுத்தறிவுக்கும் இடையே உரையாடல் தொடர்ந்து நிகழ அகுஸ்தீனிய வழியில் பொனவெந்தூர் வழியில் நிகழ்வினைப் புரிந்தவர். ஒரு சிறந்த நூலாசிரியர். எழுத்தறிவித்தவன் இறைவன். அந்த இறைவனை என் எழுத்தால் அறிவிக்கிறேன் என்று ஏகாந்தத்தில் பூத்து, காய்த்துக் கனிந்து பலன் தந்தவர். திருத்தந்தை ஆறாம் பவுல், திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல் என்று தம் காலத்து தலைமை ஆயர்களுக்கு அருகே அமர்ந்து அளவளாவி, விசுவாசத்தை விதைத்து, அறிவைப் பெருக்கி, இறையாட்சிக்காக விளைநிலத்தில் விதை விதைத்து விழிப்புணர்வோடு காத்திருக்கிற விவசாயியைப் போலப் பாடுபட்டவர்.

ஜெர்மானியருக்கே உரிய கடின உழைப்பும் நேரந்தவறாமையும் முழுமையை நோக்கிய விடாமுயற்சியும் இவருக்குள் இருந்தது இயல்பானதே. ஒழுக்கத்தின் விழுமியத்தில் ஒளிர்முத்தாக ஒளிர்ந்தவர். சமரசத்திற்குக் கிஞ்சித்தும் இடம் கொடாதவர். அறிவில் சிறந்தவர். அறிஞர். அறிஞர்களின் அறிஞர். மறைவல்லுநர். திரு அவை தேடித் தேடித் தேர்ந்து கண்டுபிடித்த நல்முத்து இவர். பாறை மீது கட்டப்பட்ட திரு அவையைப் பாதுகாத்த படைவீரர். திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல் அவர்களின் வழிகாட்டுதலில் திரு அவையின் நம்பிக்கை அறிக்கையை நுணுக்கமாக, நுண்மான் நுழைபுலத்துடன், தெளிந்த நீரோடையைப்போலக் கோர்வைப்படுத்தி, சிறிய தவறுக்கும் இடம்கொடாமல் சிற்பியைப் போல அல்லவை நீக்கி, அற்புதமாய் வடித்துத் தந்த ‘மறைக்கல்வியின் தந்தை’ இவர்.

அதிகாரப் போதையில் தள்ளாடுவது சில தலைவர்களின் இயல்பு. தலைவராக இருப்பதைவிட அதிகாரிகளாக இருக்கவே சிலர் விழைவர். ஆயர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. ஆகையால் ஆண்டவர் இயேசு, ‘தலைவன் தொண்டராகட்டும்’ ‘பாதம் கழுவட்டும்’ என்று சீடத்துவத்தைப் பக்குவப்படுத்தினார்.

தலைமைத்துவத்தைப் பண்படுத்தினார். பேதுருவுக்கு சாவிகொடுப்பதற்கு முன்பாக பூட்டைக் கொடுத்தார். பாதங்களைக் கழுவுவதற்கு முன் அவர்தம்மனத்தைக் கழுவினார்.

ஆயருக்குரிய கோல் கொடுப்பதற்கு முன்பாக, காணாமல் போன ஆட்டைத் தேடிக் கண்டுபிடிக்கக் கற்றுக் கொடுத்தார். சிலர் பதவியைத் தேடி அலைவர் ஆனால், சிலரைப் பதவி தேடி வரும். சிலர் இதில் தலைவர், அதில் சேர்மன், அதில் துணைத் தலைவர், அதில் செகரட்டரி என்று தங்கள் வாழ்க்கை விவரக் குறிப்பை அலங்கரித்துக் கொள்வர். சிலர் பதவியை அலங்கரிப்பர் சிலரைப் பதவி தாமே அலங்கரிக்கும். அங்கீகரிக்கும். நிறைகுடமும் தழும்பாது. வெறுங்குடமும் தழும்பாது. சிலர் நிறைகுடமாகப் பரிபூரணத்துவம் பெறுவர். சிலர் வெறுங்குடமாக, வெறுங்கை முழம்போடுவதுபோல் நடித்து வாழ்வர்.

பரிபூரணத்துவம் பாலியல் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்டைப் பொறுத்தவரை அனைத்து பதவிகளும் இவரைத்தேடி வந்தது. இவரைப் பதவி பணிவுடன் அலங்கரித்து. இவர் நிறைகுடமாக, அமேசான் முதல் ஆசியா வரை பெருமை சேர்த்தார். இவர் திறமை வாய்ந்தவர். திரு அவை துன்புறுத்தலுக்குள்ளாக்கியவர்களிடம் மனந்திறந்து மன்னிப்பை வேண்டியவர். மூவாயிரமாவது ஆண்டின் தொடக்கத்தில் செம்மாந்து வளர்ந்துள்ள புதிய தகவல் தொழில்நுட்பங்களுடன் திரு அவையைப் பிணைத்தவர். இணையத் திரு அவையாகப் புதிய பரிமாணம் எடுக்க வழிகாட்டியவர். பற்றற்றவர் பண்பாடுமிக்கவர்.

78 முதிர்வயதில் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இது இறைவனின் திருவுளம் என்றறிந்து சிஸ்டைன் தேவாலய வெண்புகை விண்ணை முட்டுவதற்கு இவர் கொண்டிருந்த மனநிலையே பெப். 28, 2013 அன்று சுற்றும் பூமியே சற்றுத் தள்ளாடும் வகையில் தன் உடல்நிலையைக் காரணம் காட்டி, ராஜினாமா செய்தபோதும் துணிவு கொண்டிருந்தார். எப்போதும் அமைந்த மனநிலை இவருக்குரியது. ஓய்வுக்குப் பிறகு, “நான்திரு அவைக்காகச் செபிக்கிற முதுபெரும் துறவியாக இருப்பேன்” என்று தனக்குத்தானே வரையறை செய்து கொண்டார்.

எழுத்தாற்றல்மிக்க ஆயர்கள் இன்றைய திரு அவையில் சொற்பமே. எழுத்தை நேசித்து ஆதரிப்பவர்களும் அரிதே. கம்யூனியோ என்ற இறையியல் இதழை நிறுவியவர்களில் ஒருவர். ஒரு பேராசிரியராக, கர்தினாலாக, திருத்தந்தையாக, பணி நிறைவு பெற்ற திருத்தந்தையாக என்றும் எல்லா நிலையிலும் கடிகார முள்ளோடு தன் பேனா முள்ளையும் நகர்த்தியவர். நூல்களின் வாசம் அறிய மறுக்கிற அருள்நிலையினர் இவரின் நூல்களில் மனம் புதைய வேண்டும். திரு அவையின் வேர்களாக வீரியம் பெற வேண்டும்.

இவர் ஒரு மறைவல்லுநர். திரு அவையின் மிகப்பெரிய சொத்து. சமய நல்லிணக்கத்திற்கு சாமரம் வீசியவர். கீழைத் திரு அவைக்கு கிழக்கு முகமாக இருந்தவர். பேதுருவின் வழித்தோன்றலாக, தலைமைத்துவத்தில் தன்னிகரற்று மிளிர்ந்தவர் ஒளிர்ந்தவர். அவரின் திருத்தூது மடல்களில் ஞானமும் நம்பிக்கையும் பகுத்தறிவும் முப்பரிமாணத்தில் நம்முள் ஒளி பாய்ச்சும்.

என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு (119:105) என்பார் திருப்பாடலாசிரியர். அந்த இறைவாக்கை உள்வாங்கி ஒளிர்ந்த அந்த விளக்கின் வெளிச்சம், திரு அவைக்கு ஒரு மாபெரும் அறிவுச் சுடர்! ஆம் திரு அவையின் ஒரு மாபெரும் அறிவுச் சுடர் அணைந்தது. ஆனால், கடத்திய ஒளியும் வெம்மையும் நம்மை வளப்படுத்தும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அமரத்துவம் அடைந்த முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் இவர்கள் வாழ்ந்த சமகாலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பது பெரும் பாக்கியமே.

தம் எழுத்துக்களால் திருஅவையில் இறை நம்பிக்கையை நிலைநாட்டி முற்போக்கு இறையியல் சிந்தனைகளை நிலைநிறுத்தி, இறை மக்களை இறை தரிசிப்பில் இணைத்த ஞான ஒளியாம் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற இறைவரம் வேண்டுவோம்.

## கடவுள் நமக்கு வழங்கிய உயரிய கொடை திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட்

கடவுள் எப்போதும் புதிதானவர். ஏனென்றால் அவர் அழகு, பரிவிரக்கம் மற்றும் உண்மைக்கு ஆதாரமாகவும் காரணமாகவும் இருக்கிறார் என்றும், கடவுள் ஒருபோதும் திரும்பத் திரும்ப வருவதில்லை, அவர் நம்மை எப்போதும் வியப்பில் ஆழ்த்துகிறார், புதியவற்றைக் கொண்டுவருகிறார் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

முன்னாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களின் ஆன்மீகச் சிந்தனைகளைத் தொகுத்து “God is Always New” அதாவது, ‘கடவுள் எப்போதும் புதிதானவர்’ என்ற தலைப்பில் லூக்கா கரூவுசா (Luca Caruso) அவர்களால் தொகுக்கப்பட்டுள்ள நூலிற்கு எழுதியுள்ள அணிந்துரையில் இவ்வாறு திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

சிறந்த இறையியல் பேராசிரியரான பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் தனது முழுச் சுதந்திரத்தையும் கடவுளிடம் ஒப்படைத்து, தூய ஆவியாரின் வழிகாட்டுதலில் தனது இளம் பருவத்திலிருந்தே தன்னைக் கவர்ந்த இயேசுவின் விந்தையை இன்னும் அதிகமாக ஊடுருவ முயன்ற அவரது ஆன்மீக ஆழத்தினை இந்நூல்வெளிக் கொணர்கின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

திருத்தந்தை பதினாறாம் பெனடிக்டின் ஆன்மீகச் சிந்தனைகள் அடங்கிய இந்நூலில், கிறிஸ்த்தவத்தின் பல்வேறு சிறப்பம்சங்களை ஆய்ந்தறியும் அவரின் படைப்புத்திறன், மொழி ஆகியவற்றின் வழியாக ஒருவரின் வாழ்க்கையில் கடவுளை வரவேற்கும் விலைமதிப்பற்ற கொடையை வளர்ப்பதற்குத் தொடர்ச்சியான தூண்டுதலாக அமைகிறது இந்நூல் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துக்காட்டியுள்ளார்.

திருநூல்கள் மற்றும் திரு அவைத் தந்தையர்களை அடிப்படையாகக் கொண்ட திருத்தந்தை பதினாறாம் பெனடிக்டின் சிந்தனையின் ஆழம் இன்றும் நமக்கு உதவியாக உள்ளது என்று தனது அணிந்துரையில் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு ஆன்மீகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நமது கிறிஸ்தவம் எந்தெந்த வழிகளிலெல்லாம் தூண்டுதலாக அமைந்துள்ளது என் பதையும் அறியமுடிகிறது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.




திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களை நமக்குக் கொடையாகக் கொடுத்ததற்காகக் கடவுளுக்கு நன்றி கூறுவோம் என்று தெரிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிந்தனை, ஆய்வு, செவிமடுத்தல், உரையாடல் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, திரு அவைக்குப் பணியாற்றுவதும், மனிதகுலம் அனைத்திற்கும் நன்மை செய்வதும் சாத்தியமாகும் என்று அவருடைய வார்த்தை மற்றும் சான்று வாழ்வு வழியாக நமக்குக் கற்பித்துள்ளார் என்றும் விவரித்துள்ளார்.

## திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபம்!

தந்தையே, நித்திய ஆயரே, உம் திரு அவையைப் பேரன்புடன் ஆண்ட உம் ஊழியர் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களுக்காக இறைஞ்சும் உம் மக்களின் வேண்டுதல்களைக் கனிவாய்க் கேட்டருளும். உமது கருணையால், ஒரு காலத்தில் அவரது பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்ட மந்தையோடு, அவரை இணைத்து உமது உண்மையுள்ள ஊழியர்களுக்கு நீர் வாக்குறுதி அளித்த கைமாறை அளித்தருளும்.

இவ்வுலகில் உமது மன்னிப்பு மற்றும் அன்பின் மறைபொருளைப் பற்றுறுதியுடன் நிர்வகித்த அவர், விண்ணகத்தில் உம்முடன் என்றென்றும் மகிழ்ந்திருப்பாராக.

ஞானத்திலும் அன்புநிறை பாதுகாவலிலும் உமது ஊழியரை உமது திரு அவை முழுமைக்கும் ஆசிரியராக நீர் ஏற்படுத்தினீர். அவர் இவ்வுலகில் கிறிஸ்துவின் பணியைச் செய்தார்.

உம் திருமகன் அவரை முடிவில்லா மாட்சிக்கு வரவேற்பாராக.

உமது மந்தையின் தலைமைக்குருவாக நியமிக்கப்பட்ட உமது ஊழியர், இப்போது உமது இறையரசின் வாழ்வில் குருக்களிடையே ஒருவராகக் கணக்கிடப்படுவாராக.

முடிவில்லாப் பேரின்பத்தின் கைமாறை உமது ஊழியருக்கு அளித்தருளும் உமது வாழ்வு மற்றும் அன்பின் கொடையை உமது கருணை எமக்குப் பெற்றுத் தருவதாக.

விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் உமது கருணையில் உமது ஊழியரை நாங்கள் ஒப்படைக்கிறோம். இந்த மானுடக் குடும்பத்தில் அவர், உமது அமைதி மற்றும் அன்பின் கருவியாக விளங்கினார்.

உமது புனிதர்களுடன் உம் அருட்கொடைகளில் என்றென்றும் அவர் களிகூர்வாராக. ஆமென்.

# காவலன் கலசம்



# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கே: தை பிறந்தால் வழி பிறக்கும் என்கின்றார்கள். தை பிறந்துவிட்டது. வழி பிறக்குமா?**


**ப:** அருள், உங்கள் ஆதங்கம் புரிகின்றது! “தை பிறந்தால் வழி பிறக்கும் தங்கமே தங்கம்..” என்றொரு மழலைகளுக்கான பாடல் ஒன்று உண்டு. மழலைகளை ஊக்குவிக்க, அவர்களின் உள்ளங்களில் நம்பிக்கையை ஊட்ட எழுதப்பட்ட பாடலாகும். ஆனால் அருள், எழுதிய மகான் என்னத்தை மனத்தில் வைத்து எழுதிவிட்டுச் செத்துப்போனாரோ தெரியவில்லை! தைகள் மட்டும் பிறந்து பிறந்து இறந்து போகின்றன! உதாரண-மாக, 2016இல் அடுத்த தீபாவளிக்குத் தீர்வு என்று சம்பந்தன் ஐயாவும் ரணில் ஐயாவும் சேர்ந்து கொடிகாட்டினார்கள். கொடிகாட்டியதின் பின், பல தைகள் பிறந்து இறந்தும் போயின. இவர்கள் இன்றும் உயிருடன்தான் இருக்கின்றார்கள், ஆனால், வழிகள் மட்டும் பிறப்பதாய்த் தெரியவில்லை. மீண்டும் தீர்வைக் காண்போம் என்று இப்போது கொடிக்குப் பதிலாக வெடிக்கொளுத்துகின்றார்கள்! உண்மையில் அருள், வழிகள் பிறப்பதற்கு விழிகள் வேண்டுமே! விழிகள் என்று மூன்றாவது விழியைக் குறிப்பிட்டேன்.

*(றகு, மன்னார்)*

**கே: வாழ்க்கைக்கான சில ஆலோசனைகளைத் தாருங்களேன்?**

ப: ஒன்று, பின்நோக்கிப் பார்த்து அனுபவத்தைப் பெறுங்கள். இரண்டு, முன்நோக்கிப் பார்த்து நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். மூன்று, சுற்றிப் பார்த்து யதார்த்தத்தை கண்டுபிடியுங்கள். நான்கு, உள்ளே பார்த்து உன்னைக் கண்டுபிடியுங்கள். எப்படி றகு? (தொடரும்...)


## குருத்துவ வாழ்வின் 50வது நினைவு தினம்



அருட்தந்தை கலாநிதி
அன்ரன் மத்தாயஸ் அடிகள்

மண்ணில் 10.04.1948
விண்ணில் 10.06.2022

குருத்துவத்தில் :- 06.01.1973

அருளாளர்
அன்பானவர்
பண்பானவர்
துன்புற்றோர்
துயர் துடைக்கும்
துணையாளர்
அன்ரன் மத்தாயஸ்
அடிகளார்
எம்
நெஞ்சகலா
நல்லாயன்
அஞ்சலிக்கிறோம்
உங்கள்
குருத்துவப்
பொன்விழாவில்
ஆண்டவர்
அருட்பாதம்
அருகிருக்க
இறைஞ்சுகின்றோம்

உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்

AD-08

## நீங்காத நினைவுடன்...

தோற்றம் 20 • 11 • 1935



மறைவு 25 • 12 • 2022

அமரர்
### கிறிஸ்ரினம்மா தில்லைநாயகம்

இறப்பிற்குள்ளும் வாழும் உணர்வுகளை
வரிகொண்டு மீட்டுகையில் - உம்
நினைவுகள் எம் மனங்களுக்குள்
ஓராயிரம் கதை பேசுகின்றது.

வீரத்தாயாக வரியோடு
மூன்று முத்துக்களை
விடுதலைக்காய் விதைத்தீர்.
அதனால்தான் என்னவோ
ஊரார் பிள்ளைகளை உம்பிள்ளைகளாக
ஊட்டி நீர் வளர்த்தீர்.

நல் அன்னையாக நம்பிக்கையோடு -பல
துன்பங்களை அடுக்கடுக்காய்த் தாங்கியும்
முகமலர்ச்சியோடு உம் கடமைகளை
செவ்வனே செய்து வெற்றிவாகை சூட
இறைவனிடம் இன்று நீர் சென்றுவிட்டீர்.

அம்மா உம்மை நாம்
இனிக் காணமுடியாதுதான்
ஆனாலும் எம் நினைவுகளில்
நீர் என்றும் வாழ்வீர்.

*அன்பைச் சுவைத்த உறவுகள்*

*கோவில் வீதி, யாழ்ப்பாணம்* (AD-06

## ஓராண்டு நினைவுகளுடன்...

மண்ணில் 31 • 03 • 1948



விண்ணில் 10 • 01 • 2022

### சொலமன் அல்பிரட் (ஜெயராசா)

*“உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வார்”*
*(யோவான் 11:25)*

சிரித்த முகத்துடன் எல்லோரையும் அன்போடு வரவேற்கும்
சின்ன மாமாவின் முகம் கண்டு ஓராண்டு ஆனதுவோ
ஆனாலும் மறவாமல் என்றென்றும் நினைத்திருப்போம்
நீங்கள் தந்த மாசற்ற அன்பினையும் மட்டற்ற அக்கறையினையும்
இறைவனின் இல்லமதை அலங்கரிக்கச் சென்ற நீங்கள்
இறைவனின் அன்பில் நித்தமும் மகிழ்ந்திருக்க
மூவொரு இறைவனை இடைவிடாது இறஞ்சுகின்றோம்

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், நண்பர்கள்

(AD-05

## விண்ணக வாழ்வின் 17ம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 13 • 06 • 1913



இறப்பு 15 • 01 • 2006

அமரர்
### மருத்தீன் அந்தோனி பர்னாந்து
(பொன்னுத்தம்பி)

‘ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான்குடியிருக்க வேண்டும். தி.பா.27:4

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் அன்புக்கு
இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எம் வாழ்வில்
ஒளியேற்றிய என் அன்பு ஐயாவே! நீர் இறைவனுடன்
இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

5ம் வட்டாரம்
மண்டைதீவு

(AD-03)

## நினைவழியா நினைவுகளுடன்...

9ம் ஆண்டு நினைவு



அமரர்
றெஜினா
நீக்கிலாப்பிள்ளை
பிறப்பு 08.09.1945
இறப்பு 31.05.2014

2ம் ஆண்டு நினைவு



அமரர்
சவிரிமுத்து
நீக்கிலாப்பிள்ளை
பிறப்பு 27.08.1938
இறப்பு 21.01.2021

உயிர் தந்து உணவளித்து
தோள் சுமந்து எமைக் காத்த தந்தையே
உம் முகம் பார்த்து ஆண்டுகள்
இரண்டு ஆனதையா - ஆனாலும்
நினைவுகளாய் எம்முடன் வாழ்கின்றீர்

புன்னகையானது உன் முகம் அம்மா
பாசமானது உம் கரங்கள் அம்மா
பக்தியில், பாசத்தில், பண்பில் எம்மை
வளர்த்திட்ட அம்மா!
ஆயிரம் உறவுகள் எம்மைத் தேடி வந்தாலும்
உங்கள் தாய்மைக்கு ஈடாகுமா?

அப்பா, அம்மா எமைக் கண்ணீரில்
தவிக்கவிட்டு நீங்கள் மட்டும் ஏன்
சென்றீர்கள்..!
உங்கள் மேல் கொண்ட அன்பும் பாசமும்
என்றுமே மாறாது!
நித்திய இறைவனோடு சங்கமிக்க
உமக்காக செபிக்கின்றோம் எப்போதும்

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

தகவல் :- அருட்சகோதரி அஜந்தா (AC)

(AD-10)

# நினைவெல்லாம் நீயே இறுவட்டு வெளியீடு



யாழ். திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடாக இசைத் தென்றல் யேசுதாசன் அவர்களின் தயாரிப்பில் உருவான "நினைவெல்லாம் நீயே" கிறிஸ்தவப் பாடல்கள் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு கடந்த 08ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது.

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஜீவா போல் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளும், சிறப்பு விருந்தினராக இசைவாணர் கண்ணன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் திருமண வாழ்வின் 50ஆவது பொன் விழாவைக் கொண்டாடும் திரு திருமதி யேசுதாசன் தம்பதியினர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

# இறையியல் இளமாணிக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள்

யாழ். மறைமாவட்டத்தில் அமைந்துள்ள புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியின் புதிய கல்வி ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயர்தரம் சித்தியடைந்த அனைத்து மாணவர்களும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன் விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்படிவத்தினை யாழ். பிரதான வீதியில் புனித மடுத்தீனார் குருமட வளாகத்தில் அமைந்துள்ள புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் எனக் கல்லூரியின் இயக்குனர் அருட்பணி A. ஜெயரஞ்சன் அடிகள் தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரி திருப்பீட ஊர்பானியாப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் இங்கு வழங்கப்படும் கிறிஸ்தவ கற்கைகள் இளமாணிப் பட்டம் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய வின்சென்ற் டி போல் சபையினரின் ஆண்டுவிழா



யாழ். நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய வின்சென்ற் டி போல் சபையினரின் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த 14ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய ஆசிரிய ஆலோசகர் திரு இக்னேசியஸ் அவர்களும், சிறப்பு விருந்தினராக வின்சென்ற் டி போல் சபையின் மறைமாவட்ட இயக்குநரும் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வுகளைப் பங்குத்தந்தை S. எயின்சிலி றொஷான் அடிகள் ஒழுங்குசெய்திருந்தார்.

# மேரி பஸ்ரியன் அடிகளின் நினைவேந்தல்



கிளிநொச்சி மாவட்டம் பிரமந்தனாறு புன்னை நீராவிப் பிரதேசத்திலுள்ள ஆங்கில வளாகத்தில் போரில் கொல்லப்பட்ட அருட்பணியாளர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள புல்தரைகளில் அமைந்துள்ள நினைவிடத்தில் அருட்தந்தை மேரி பஸ்ரியன் அடிகளின் நினைவு நாள் நிகழ்வு கடந்த 05ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது.

வளாக இயக்குநர் அருட்தந்தை எட்வின் சவுந்தரா அடிகளின் ஒழுங்குபடுத்தலில் அருட்தந்தை நிக்சன் கொலின்ஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுத்திருப்பலியும் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றன.

# சிறைக் கைதிகளுக்கு வாசிப்பு நூல்கள்



யாழ் சிறைச்சாலைக் கைதிகளின் வாசிப்புத் திறனை ஊக்கப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் வழங்கும் நிகழ்வு கடந்த டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி சிறைச்சாலையில் நடைபெற்றது.

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை அன்புராசா அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நோர்வே - பேகன் அன்பகம் குழுமத்தினரின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி நூல்களும் அவற்றுடன் இணைந்து ஒரு தொகுதித் தளபா டங்களும் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரியிடம் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி சத்தியமூர்த்தி அவர்களும், கவிஞரும் எழுத்தாளருமான கருணாகரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

# பரதநாட்டியத்தில் தேசிய ரீதியில் முதன்மை



தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட பரத நாட்டியப் போட்டி கடந்த மாதம் அனுராதபுரம் சுவர்ணபாலி மகளிர் பாடசாலையில் நடைபெற்றது. இப்போட்டியில் கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தியாலய மாணவி ஜெயசீலன் சர்மிளா அவர்கள் சிரேஸ்ட பிரிவுக்குட்பட்ட பத உருப்படிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

# நீர்வேலியில் ஏகலைவன் நாட்டுக்கூத்து



நீர்வேலி வடக்கு சென் மேரிஸ் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் தாயகக் கலைஞர்களை இணைத்து முன்னெடுக்கப்பட்ட பரிஸ் பாலம் படைப்பகத்தின் கிராமியக் கலைமாலை நிகழ்வு கடந்த 02ஆம் திகதி நீர்வேலி வடக்கு ஞானப்பிரகாசர் கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நடனங்கள், மெல்லிசைச் சங்கமம் மற்றும் கலைஞர் கௌரவிப்பு என்பவற்றுடன் யாழ். திருமறைக் கலாமன்றக் கலைஞர்களின் ஏகலைவன் நாட்டுக்கூத்தும் சிறப்பு நிகழ்வாக மேடையேற்றப்பட்டுப் பலரது பாராட்டினையும் பெற்றது.

இந்நிகழ்வில் திருமறைக்கலாமன்றப் பிரதி இயக்குநர் திரு. ஜோண்சன் ராஜ்குமார் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.


INTERNATIONAL DENTAL CARE

Professional Dental Centre In Sri Lanka

IDC

International Dental Care Hospitals (Pvt) Ltd.

யாழ், கொழும்பு, வவுனியாவில் இயங்கிவரும் பல் வைத்திய நிலையத்துக்கு

**Dental Technician**

பயிலுனர் தேவை!

வயது:- 18 - 23 வயதிற்குட்பட்ட கத்தோலிக்க ஆண்கள்

தகுதி :- க.பொ.த சாதாரணதரம் (G.C.E.O/L)

ஆரம்ப சம்பளம் :- ரூபா 30,000/-

பங்குத்தந்தையின் சிபாரிசு கடிதம் அவசியம்

தொடர்புக்கு:-
இயக்குநர்
International Dental Care
0777588729

Ad- 02


# நூற்றாண்டு விழாக் கண்ட இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்



இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கடந்த மாதம் கொண்டாடப்பட்டது. முதல் நாள் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி செயலக மேலதிக செயலர் திரு இளங்கோவன் அவர்களும்.சிறப்பு விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து ஆசியுரை வழங்கினார். இவ் விழாவில் நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. இரண்டாம் நாள் நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகள் கலந்து ஆசியுரை வழங்கினார். அன்று பல கலைநிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.

இந்நிகழ்வுகள் யாவும் உள்நாட்டு வெளிநாட்டு பழைய மாணவர்களின் நிதி அனுசரணையில் இடம்பெற்றன. இப்பாடசாலை இந்து சமயப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்த போதிலும் இங்கு கல்வி பயின்ற மாணவர்களில் மூவர் குருக்களாகவும் ஒருவர் அருட்சகோதரியாகவும் பணியாற்றி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.